மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி .

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் மாசித் திங்கள் 16 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 133/2019 -ல்**

**அசல் வழக்கு எண். 50/2019**

1. அண்ணாதுரை
2. லெட்சுமி .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

சந்திரசேகரன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 21.02.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. பாண்டிதென்னவன், திரு. G. அறிவழகன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. G. ஜீவானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று( 28.02.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது சமூகம் நீதிமன்றத்தில் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியுடன் அளந்து கண்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி சிபிசி

கட்டளை 26 விதி 9-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். மனு சொத்தானது 1ம் மனுதாரரின் தந்தையும், 2 ம் மனுதாரரின் கணவரான இறந்த சீனிவாசனுக்கு தமிழ்நாடு அரசால் நீண்டநாள் குடியிருப்பு அனுபவத்தை அனுசரித்து கடந்த 27.01.1990 ம் தேதியன்று மனை ஒப்படைவு செய்து பட்டா வழங்கப்பட்டு சீனிவாசனின் அனுபவத்திலும், உரிமையிலும் இருந்து வந்துள்ளது. 1ம் மனுதாரர் 1990 ம் தேதியன்று சிங்கப்பூர் சென்றிருந்த வகையில், மனுச்சொத்தில் உள்ள கூரைவீட்டை அகற்றி ஓட்டு வீடு கட்டப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கும், மனுச்சொத்திற்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை. மனுச்சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரருக்கும் சொத்து உள்ளதால் காலஞ்சென்ற சீனிவாசனுக்கு இடையூறு செய்யும் விதமாக தொடர்ந்து தொந்தரவு செய்து வந்துள்ளார். 1ம் மனுதாரர் இந்தியாவில் இல்லை என்பதை அறிந்து கொண்டு மனுச்சொத்தை அபகரித்து விடலாம் என்ற நோக்கத்தோடு 2008 ம் ஆண்டு மனுசொத்தில் ஒரு ரெடிமேட் காம்பவுண்ட் அமைக்க முயற்சித்தபோது தனது உறவினர்களை கொண்டு காலஞ்சென்ற சீனிவாசனால் தடுத்து நிறுத்தப்பட்டது. காலஞ்சென்ற சீனிவாசன் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சொத்தில் இடையூறு செய்வதாக கண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 157/2008 தாக்கல் செய்யப்பட்டு 23.01.2012 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி சீனிவாசனுக்கு இடையூறு செய்து வந்த நிலையில் ஊர் முக்கியஸ்தர்கள் மூலம் 2012 ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டு சமரசமாக ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் யாதொரும் பிரச்சினையும் செய்யமாட்டார் என்றும், எவ்வித அத்துமீறலான ஆக்கிரமிப்போ, இடையூறோ செய்யமாட்டார் என்றும் முடிவு செய்யப்பட்டது.

சீனிவாசன் 09.12.2016 ஆம் ஆண்டு இறந்துவிட்டதால் மனுதாரர் மற்றும் அவரது மனைவி மற்றும் மனுதாரரின் தாயார் வசித்து வந்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும் சீனிவாசனுக்குமிடையே நடைபெற்ற வழக்கின் விபரம் தெரியாது. எதிர்மனுதாரரின் மனைவி அவரது வீட்டு பாத்ரூமில் இருந்தும், மற்ற வீட்டுவேலைகளினால் வரும் அசுத்த நீரையும் மனுதாரரின் வீட்டின் வடபுறம் சுவர் அருகே செல்லும் அளவிற்கு வாய்க்கால் எடுத்து திருப்பிவிட்டுள்ளதால் சாக்கடை நீரால் மனுதாரரின் வீட்டிற்குள் இருப்பதற்கே மிகவும் சிரமமாகஇருந்து வருகிறது. 21.03.2019 ம் தேதியன்று எதிர்மனுதாரரை அணுகி அவரதுமனைவியின் செய்கையை நிறுத்திவைத்துக்கொள்ளவேண்டியும், வீட்டிற்குள் துர்நாற்றம் வீசுகிறது என்றும் கூறியபோது, மனுதாரரின் வீட்டின் வடபுறம் தாய் சுவற்றுக்கு அருகாலோடு வழக்குரையின் மாதிரிவரைபடத்தின் ABCD என காண்பிக்கப்பட்டுள்ள 215 சதுரடி நிலம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் அந்த இடத்தில் தான் அசுத்த நீர் தேங்கச்செய்வதாகவும் என்று சண்டையிட்டுள்ளார். மனுதாரரின் வீட்டின் வடபுறம் சாக்கடை நீர் தேங்கியுள்ள பகுதியான 2 மீட்டர் அகலம், 10 மீட்டர் நீளம் கொண்டு 20 மீட்டர் கொண்ட 215 சதுரடி மனுதாரருக்கு சொந்தமானது என்று கூறியபோது, எதிர்மனுதாரர்/பிரதிவாதி மாதிரிவரைபடத்தில் ABCD என காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 20 மீட்டர் நிலப்பரப்பின் அனுபவத்தை இடையூறு செய்யும் விதமாக ஆட்கள் மூலம் பிரச்சனை செய்து 25.03.2019 ம் தேதியன்று நள்ளிரவில் வடபுறம் 2 மீட்டர் அகலம் 10 மீட்டர் நீளம் கொண்டு சுமார் 20 மீட்டரில் அத்துமீறி கருங்கல் கால் நாட்டு அவசரகதியாக செங்கல்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதியை அணுகி அப்புறப்படுத்துமாறு கேட்டபோது மறுத்து முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறிவிட்டார் எனவே, மனுச்சொத்தில் வடபுறம் 2 மீட்டர் அகலம், 10 மீட்டர் நீளத்திற்கு

எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஆக்கிரமித்து கருங்கல் காலுடன் கூடிய செங்கல் சுவர் கட்டப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தின் ஆக்கிரமிப்பினை கிராம நிர்வாக அலுவலர் சர்வேயர் உதவியுடன் அளந்து கண்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையின் சுருக்கம்</u> :-**

மனுதாரரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்கக்கூடியதல்ல. வழக்குச்சொத்தை பொறுத்து ஏற்கனவே, 1வது வாதியின் தகப்பனாரும், 2வது வாதியின் கணவருமான சீனிவாசனுக்கு எதிராக எதிர்மனுதாரரால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு அனுமதிக்கப்படடு உத்தரவாகியுள்ள விபரம் மனுவில் மறைக்கப்பட்டுள்ளது. வழக்குப்பரிகாரத்தை பொறுத்து உரிய ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் மூலமாக வழக்கை நிரூபிக்க வேண்டியது மனுதாரர்களின் கடமை ஆகும். நீதிமன்ற ஆணையர் மூலம் ஆவணம் மற்றும் சாட்சியை உற்பத்தி செய்ய வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மற்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எதிர்மனுதாரரால் கழிவு நீர் செல்லத்தக்க வாய்க்கால் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. வழக்கு சொத்தில் சாக்கடை நீர் தேங்கியுள்ளதாக கூறியிருப்பது தவறு. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனு சொத்தானது

1ம் மனுதாரரின் தந்தையும், 2ம் மனுதாரரின் கணவரான இறந்த சீனிவாசனுக்கு தமிழ்நாடு அரசால் நீண்டநாள் குடியிருப்பு அனுபவத்தை அனுசரித்து கடந்த 27.01.1990 ம் தேதியன்று மனை ஒப்படைவு செய்து பட்டா வழங்கப்பட்டு சீனிவாசனின் அனுபவத்திலும், உரிமையிலும் இருந்து வந்துள்ளது என்றும், 1ம் மனுதாரர் 1990ம் தேதியன்று சிங்கப்பூர் சென்றிருந்த வகையில் மனுச்சொத்தில் உள்ள கூரைவீட்டை அகற்றி ஓட்டு வீடு கட்டப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் சொத்து மனுச்சொத்திற்கு அருகில் இருப்பதை பயன்படுத்திக்கொண்டு மனுச்சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் மாதிரிவரைபடத்தில் ABCD என காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 215 சதுர அடியில் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்று பிரச்சினை செய்து அசுத்த நீரை தேங்கிவிடு கிறார் என்றும், மாதிரிவரைபடத்தில் ABCD என காண்பிக்கப்பட்டுள்ள 20மீட்டர் நிலப்பரப்பின் அனுபவத்தை இடையூறு செய்யும் விதமாக ஆட்கள் மூலம் பிரச்சனை செய்து 25.03.2019 ம் தேதியன்று நள்ளிரவில் வடபுறம் 2 மீட்டர் அகலம் 10 மீட்டர் நீளம் கொண்டு சுமார் 20 மீட்டரில் அத்துமீறி கருங்கல் கால் நாட்டு அவசரகதியாக செங்கல்சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றும், மனுச்சொத்தில் வடபுறம் 2மீட்டர் அகலம், 10 மீட்டர் நீளத்திற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஆக்கிரமித்து கருங்கல் காலுடன் கூடிய செங்கல் சுவர் கட்டப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தின் ஆக்கிரமிப்பினை கிராம நிர்வாக அலுவலர் சர்வேயர் உதவியுடன் அளந்து கண்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.** எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், வழக்குப் பரிகாரத்தை பொறுத்து உரிய ஆவணங்கள்மற்றும் சாட்சிகளின் மூலமாக வழக்கை

நிரூபிக்க வேண்டியது மனுதாரர்களின் கடமை என்றும், நீதிமன்ற ஆணையர் மூலம் ஆவணம் மற்றும் சாட்சியை உற்பத்தி செய்ய வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மற்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எதிர்மனுதாரரால் கழிவு நீர் செல்லத்தக்க வாய்க்கால் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், வழக்கு சொத்தில் சாக்கடை நீர் தேங்கியுள்ளதாக கூறியிருப்பது தவறு என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சினை</u>:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டது.

**2.** இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**3.** மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கானது வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்தில் வடபுறத்தில் பிரதிவாதியால் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளதும், மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள ABCD பகுதி 20 மீட்டர் (215 சதுரடி) நிலத்தை காலி சுவாதீனமாக சமூகம் கோர்ட்டார் அவர்கள் குறிப்பிடும் கெடுவிற்குள் வாதிகளுக்கு ஒப்படைக்க வேண்டி தவறும்பட்சத்தில் சமூகம் நீதிமன்றமே தாவா சொத்தினை வசப்படுத்திக்கொடுக்க ஓர் சுவாதீனப்பரிகாரம் வழங்கியும், தாவா சொத்தில் வடபுறத்தில் பிரதிவாதியால் ஆக்கிரமித்துள்ள வழக்குரையில் மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள ABCD பகுதியில் பிரதிவாதியால் கட்டப்பட்டுள்ள கருங்கல்காலுடன் கூடிய செங்கல் சுவற்றை அகற்றி தரவேண்டி ஓர் செயல்

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் பிரதிவாதியால் ஆக்கிரமித்துள்ள பகுதியில் பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, வேறு கட்டுமானங்களோ, நிலவியல்அமைப்பை மேற்கொண்டு மாற்றவோ கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காகப்போடப்பட்டிருந்தபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலிக்கும்போது, மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்களிலிருந்து மனுச்சொத்தில் இருதரப்பினர்களுக்கு இடையே ஆக்கிரமிப்பு சம்மந்தமாக பிரச்சினை இருப்பதாக அறிய முடிகிறது. மனுதாரர்கள் தரப்பில் தாவா வரைபடத்தில் ABCD ஆக்ரமிப்பு சம்மந்தமாக காண்பிக்கப்பட்டுள்ள 215 சதுரடி நிலத்தில் சாக்கடைநீர் தேங்கியுள்ளதாகவும், 2 மீட்டர் அகலம், 10 மீட்டர் நீளம் கொண்டு சுமார் 20 மீட்டரில் கருங்கல் செங்கல் சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், சர்வேயர் மற்றும் கிராமநிர்வாக அலுவலர் உதவியுடன் கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு விவரிக்க நீதிமன்ற ஆணையர் நியமிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், வழக்கில் உரிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தாமல், சாட்சியங்கள் சேகரிப்பதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என்ற எதிர்மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதம் குறித்து ஆய்வு செய்கையில், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு பார்வையிட்டு தாவா வரைபடத்தில் ABCD காண்பிக்கப்பட்டுள்ள 215 சதுரடி நிலத்தினை பற்றிய அறிக்கை தாக்கல் செய்வதால், எதிர்மனுதாரருக்கு எந்தவித

நேரடியான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால் வழக்குச் சொத்தில் தாவா வரைபடத்தில் ABCD காண்பிக்கப்பட்டுள்ள 215 சதுரடி நிலத்தில் சாக்கடைநீர் தேங்கியுள்ளதாகவும், 2 மீட்டர் அகலம், 10 மீட்டர் நீளம் கொண்டு 20 மீட்டரில் எழுப்பப்பட்டுள்ள கருங்கல் செங்கல் சுவர் குறித்தும், நீதிமன்றத்திற்கு தெளிவாக புலப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையே ஆக்ரமிப்பு சம்மந்தமாக பிரச்சனை இருப்பதை கருத்திற்கொண்டும், அசல் வழக்கில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளதை கருத்திற்கொண்டும், இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதால், தேவையற்ற வாய்மொழி சாட்சியம் தவிரக்கப்படும் என்பதை கருத்திற்கொண்டும், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதால் ஆக்ரமிப்பு பற்றிய தெளிவான விபரங்கள் இந்நீதிமன்றத்திற்கு கிடைக்கும் என்பதை கருத்திற்கொண்டும் வழக்கின் தன்மை கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக திரு. R. கண்ணதாசன் அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ. 5,000/- நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, இருதரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளவீடு செய்து 2 மாத காலத்திற்குள் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்குரிய ஊதியம் ரூ. 5,000/-த்தை வரும் 14.03.2022 ம் தேதிக்குள்

நேரில் ஆணையரிடம் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 15.03.2022

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (28.02.2022) அவையறியப் பகரப்பட்டது.

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI
DN: cn=C KALAIVANI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும்** : இல்லை

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI
DN: cn=C KALAIVANI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.